வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்— சரவணக்குமார்

தேதி 6.9.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இந்தியாவும் அமெரிக்காவும் எதிர்காலத்தை உள்ளடக்கிய ஆக்கப்பூர்வமான நட்பு நாடுகளாக திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

புதுச்சேரி சட்டப்பேரவை கூட்டத் தொடர் வரும் 18 ஆம் தேதி கூடுகிறது.

என்ஐஆர்எப் வெளியிட்டுள்ள பல் மருத்துவ கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரியில் உள்ள மகாத்மாகாந்தி முதுநிலை பல் மருத்துவ நிறுவனம் 23 ஆவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது.

*பிரதமர் 1 (15)*

இந்தியாவும் அமெரிக்காவும் எதிர்காலத்தை உள்ளடக்கிய ஆக்கப்பூர்வமான நட்பு நாடுகளாக திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவுடனான நல்லுறவு தொடர்பாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பின் உணர்வுகளையும், மதிப்புகளையும் பாராட்டுவதாக குறிப்பிட்டுள்ளார். விரிவான சர்வதேச பாதுகாப்பு ஒத்துழைப்பை நேர்மறையுடன் இருநாடுகளும் எதிர் நோக்கி உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான நல்லுறவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி முக்கியத்துவம் அளித்து வருவதாக மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், திரு டொனல்ட் டிரம்பிற்கும், திரு நரேந்திர மோடிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் நல்ல நட்புறவு உள்ளதாக கூறினார். இருநாடுகளுக்கும் இடையே வர்த்தகம் தொடர்பான பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

*பிரதமர் 2 (6)*

இதனிடையே, பஞ்சாப், இமாச்சலபிரதேச மாநிலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பிரதமர் இன்று நேரில் சென்று பார்வையிட்டார். கனமழையின் காரணமாக பஞ்சாப் மாநிலத்தில்

குர்தாஸ்பூர், பெரோஸ்பூர், அமிர்தசரஸ் உள்ளிட்ட 22 மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்து 948 கிராமங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மீட்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஜிஎஸ்டி (12)

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது. இந்த வரி குறைப்பு நடவடிக்கைகள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைவார்கள் என்று தகவல் ஒலிபரப்புத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. 4 அடுக்குகளாக இருந்த இந்த வரி விதிப்பு தற்போது 5 மற்றும் 18 என்ற 2 அடுக்குளாக மாற்றப்பட்டுள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் 5 சதவிகித வரி விதிப்பிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக சிமெண்ட் விலை குறையும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். சமூக ஊடகத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், இதன் மூலம் கட்டுமான தொழில் வளர்ச்சி உத்வேகம் பெறும் என்றும் கூறியுள்ளார்.

ஜே பி நட்டா (8)

பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கட்சியின் தேசிய தலைவர் திரு ஜே பி நட்டா தலைமையில் புதுடெல்லியில் இன்று நடைபெறுகிறது. குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் வாக்களிப்பு நடைமுறைகள் குறித்து இதில் ஆலோசிக்கப்படும். வரும் செவ்வாய் கிழமை நடைபெறும் குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக பிஜேபி யின் திரு சி பி ராதாகிருஷ்ணனும், இண்டி கூட்டணி வேட்பாளராக முன்னாள் நீதிபதி திரு சுதர்சன் ரெட்டியும் போட்டியிடுகின்றனர்.

தர்மேந்திர பிரதான் (6)

தேசிய நல்லாசிரியர் விருது பெற்றவர்கள் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான பயணத்திற்கு கூடுதல் உத்வேகம் அளிப்பார்கள் என்று மத்திய கல்வித் துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார். இந்த விருது பெற்றவர்களுடன் நேற்று புதுடெல்லியில் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார். நாட்டின் வளர்ச்சியில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

*புதுச்சேரி சட்டசபை 1(9)*

புதுச்சேரி சட்டசபையில் பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த மார்ச் மாதம் 10 ஆம் தேதி துணை நிலை ஆளுநர் உரையுடன் தொடங்கியது. மார்ச் 12 ஆம் தேதி முதலமைச்சர் திரு ரங்கசாமி பட்ஜெட்டை தாக்கல் செய்தார். தொடர்ந்து, 13 நாட்கள் நடைபெற்ற இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் மார்ச் 27 ஆம் தேதி மாநில அந்தஸ்தை வலியுறுத்தும் அரசு தீர்மானத்தை நிறைவேற்றி முடிவடைந்தது. 6 மாதத்திற்கு ஒருமுறை சட்டமன்றம் கூட்டப்பட வேண்டும் என்பதனால் வருகிற 18 ஆம் தேதி புதுச்சேரி சட்டசபை கூடுகிறது. இதுகுறித்து சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் செய்தியாளர்களிடம் வழங்கிய தகவல்......

(வாய்ஸ்)

*புதுச்சேரி சட்டசபை 2 (13)*

**(வாய்ஸ்)**

15 ஆவது புதுச்சேரி சட்டப்பேரவையின் 6 ஆவது கூட்டத் தொடரின் 2 ஆவது பகுதி வரும் 18 ஆம் தேதி காலை 9.30 மணிக்கு சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள பேரவை கூடத்தில் கூடுவதாக சபாநாயகர் திரு செல்வம் அறிவித்துள்ளார். சட்டப்பேரவை கூட்டம் எத்தனை நாள் நடைபெறும் என்பது குறித்து அலுவல் ஆய்வுக் குழு முடிவு செய்யும் என்றும், புதுச்சேரியில் தொழில் தொடங்குவதை எளிதாக்கும்

சட்டமசோதா மற்றும் ஜிஎஸ்டி 2 ஆவது சட்ட திருத்த மசோதா ஆகியவை இதில் தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தொழில் தொடங்குவதை எளிதாக்கும் சட்டத்தின் கீழ், அரசு துறைகளுக்கு அனுமதி அளிக்க காலக்கெடு நிர்ணயிக்கப்பட உள்ளதாக தெரிவித்த அவர், சட்டமன்றத்தின் பட்ஜெட் அறிவிப்புகள், வாக்குறுதிகள் நிறைவேற்றம், மாநில அந்தஸ்து ஆகியவை குறித்தும் இந்த கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட உள்ளதாக கூறினார்.

*சந்திரகிரகணம்* 1 (18)

நாளை இரவு நிகழ உள்ள முழு சந்திரகிரகணம் இரவு 9.57 மணிக்கு துவங்கி, 85 நிமிடங்கள் நீடிக்கும். இதை பொதுமக்கள் வெறும் கண்களால் பார்க்கலாம். சென்னையில் உள்ள பிர்லா கோளரங்கில் தொலை நோக்கியில் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர் கோட்டில் வரும்போது கிரகணம் நிகழ்கிறது. பூமியின் நிழல் நிலவின் மீது விழுவதால் அது சந்திரகிரகணம் அல்லது நிலவு மறைப்பு என்று அழைக்கப்படுகிறது. நாளை இரவு முழு சந்திரகிரகணம் இந்தியா முழுவதும் தெரியும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இதுகுறித்து சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் செயல் இயக்குநர் கூறுகையில், 85 நிமிடங்கள் நீடிக்கும் இந்த சந்திரகிரகணம் இரவு 8.58 மணிக்கு சந்திரன் முதலில் மங்கலான புறநிழல் பகுதிக்கும் நுழையும். இதை நம் கண்களால் பார்ப்பது கடினம் என்றும், பின் 9.57 மணிக்கு பகுதி கிரகணமாக துவங்கி,

பின் இருண்ட கருநிழல் பகுதிக்குள் நுழையும் எனவும், அந்த கிரகணத்தை நாம் எளிதாக காண முடியும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இரவு 11.01 மணி முதல், நள்ளிரவு 12.33 மணி வரை சந்திரன் முழுமையாக மறையும் என்றும், அதிகாலை 1.26 மணிக்கு சந்திரன் கருநிழல் பகுதியில் இருந்து முழுமையாக வெளியேறி, அதிகாலை 2.25 மணிக்கு புறநிழல் பகுதியை

*சந்திரகிரகணம்* 2 (8)

விட்டு வெளியேறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த கிரகணம் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்காவின் கிழக்கு பகுதி, பசிபிக், அட்லாண்டிக், இந்திய பெருங்கடல், ஆர்ட்டிக், அண்டார்டிகா பகுதிகளில் தெரியும். அடுத்த சந்திரகிரகணம் 2028 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ல் நிகழ உள்ளது. வரும் 21, 22 ஆகிய தேதிகளில் நிகழ உள்ள சூரிய கிரகணம் இந்தியாவில் தெரியாது என்றும், தெற்கு ஆஸ்திரேலியா, பசிபிக் தெற்கு பகுதிகள், அட்லாண்டிக் மற்றும் அண்டார்டிகாவின் சில பகுதிகளில் தெரியும் என்றும் அவர் கூறினார்.

*பல் மருத்துவ கல்லூரி* 1(12)

2025 ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு என்ஐஆர்எப் வெளியிட்டுள்ள பல் மருத்துவ கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரியில் உள்ள மகாத்மாகாந்தி முதுநிலை

பல் மருத்துவ நிறுவனம் 23 ஆவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது. இது புதுச்சேரிக்கு பெருமை சேர்ப்பதாக புதுச்சேரி முதல்வரும் பல் மருத்துவ கல்லூரியின் தலைவருமான திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். இந்த சாதனைக்காக பல் மருத்துவ கல்லூரி முதல்வர், ஆசிரியர், ஊழியர்கள் மற்றும் மாணவர்களை முதலமைச்சர் பாராட்டி உள்ளார். மேலும் இக் கல்லூரியில் இந்த கல்வியாண்டு முதல் பல் மருத்துவ பட்டப் படிப்பிற்கான சேர்க்கை 125 இடங்களாக அதிகரித்துள்ளதால் புதுச்சேரி மாணவர்களுக்கு மிகவும பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்……

**வாய்ஸ்**

*பல் மருத்துவ கல்லூரி* 2 (16)

**வாய்ஸ்**

தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு என்ஐஆர்எப் மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு துறையால் நாடு முழுவதும் உள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை தர வரிசைப்படுத்துவதற்காக தொடங்கப்பட்ட அமைப்பாகும். இது, கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, பட்டப்படிப்பு முடிவுகள், வேலை வாய்ப்பு மற்றும் சமூகத்தில் கல்லூரியை பற்றிய மக்களின் கருத்து ஆகியவற்றின் அடிப்படையில் அகில இந்திய அளவில் தரவரிசைப் பட்டியலை ஆண்டு தோறும் வெளியிடுகிறது. 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு என்ஐஆர்எப்

வெளியிட்டுள்ள பல் மருத்துவ கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் புதுச்சேரியில் உள்ள மகாத்மாகாந்தி முதுநிலை பல் மருத்துவ நிறுவனம் 23 ஆவது இடத்தை பெற்று சாதனை படைத்துள்ளது. இது புதுவைக்கு பெருமை சேர்க்கும் நிகழ்வாக கருதப்படுகிறது. தென்னிந்திய அளவில் அரசு பல் மருத்துவ கல்லூரிகளில் இக்கல்லூரி மட்டுமே தேர்வாகி உள்ளது குறிப்பிடத் தக்கது. சென்ற ஆண்டு என்ஐஆர்எப் தர வரிசையில் 35 ஆவது இடத்திற்கு தேர்வாகி இருந்த இக் கல்லூரி இந்த ஆண்டு 12 இடங்கள் முன்னேறி 23 ஆவது இடத்திற்கு வந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

ஜம்மு (11)

ஜம்மு – காஷ்மீரில் பாகிஸ்தானை சேர்ந்த ட்ரோன் பறந்ததை அடுத்து கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. சம்பா மாவட்டத்தை ஒட்டிய எல்லைப் பகுதியில் ட்ரோன் தென்பட்டதாகவும், இதனையடுத்து அப்பகுதியில் ராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஜம்மு காஷ்மீரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா இன்று ஆய்வு செய்தார். அனந்த்நாக் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் ஆய்வு மேற்கொண்ட அவர், நிவாரண பணிகளை விரைவுப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இதற்கிடையே, உத்தம்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட

பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு பொருட்கள் விமானம் மூலம் விநியோகிக்கப்பட்டன.

வானிலை ( 5)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இன்று முதல் வரும் 12 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி- காரைக்கால் ஆகிய பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விளையாட்டு (15)

யு.எஸ் ஓபன் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் இன்று நள்ளிரவு நடப்பு சாம்பியனான பெலாரசின் சபலன்கா – அமெரிக்காவின் அமன்டா அனிசிமோவா-வை எதிர்கொள்கிறார். ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் நாளை இத்தாலியின் ஜனிக் சின்னர் – ஸ்பெயினின் கேர்லோஸ் அல்கரசை எதிர் கொள்கிறார். இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் சின்னர், கனடாவின் பெலிக்சை 6-1, 3-6, 6-3, 6-4 என்ற செட்களில் வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறி உள்ளார்.

உலக ஊஷு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஷிவானி, கரினா கவுசிக் மற்றும் அபர்ணா இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி

உள்ளனர். பிரேசிலில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 75 கிலோ எடைப் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ஷிவானி, ரஷ்யாவின் எக்கதெரினா வால்சுக் – ஐ வென்றார். மகளிர் 60 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் கரினா கவுசிக் பிரேசிலின் நத்தாலியா பிரிக்வெசி சில்வா-வை வென்றார். மகளிர் 55 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அபர்ணா, இந்தோனேஷியாவின் தரிஷா டியா பிளோரன்டினா-வை வென்றார்.